


பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில் நேற்று முன்தினம் (08.10.2025) நடைபெற்ற 60 வது ஆண்டு வைர விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு , அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர். உடன் மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், செ.ராபர்ட் புரூஸ் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மு.அப்துல் வஹாப், ரூபி.ஆர்.மனோகரன் மேயர் கோ.ராமகிருஷ்ணன் துணை மேயர் கே.ஆர்.ராஜு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி – அரசு மருத்துவக்கல்லூரி 60வது ஆண்டு வைர விழா!

# சிறப்பாகப் பணிபுரிந்த மருத்துவர்கள், மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் - கேடயங்கள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினர்!

நெல்லை, அக்.10- திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில் நேற்று முன்தினம் (08.10.2025) நடைபெற்ற 60வது ஆண்டு வைர விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர்.மரு.ரேவதி பாலன், ஆகியோர் முன்னிலையில் வைர விழா மலரினை வெளியிட்டு சிறப்பாக பணிபுரிந்த மருத்துவர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கேடயங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு மருத்துவத்துறையில் பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறது. குறிப்பாக மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தினை ஐநா சபையால் தமிழ்நாடு அரசிற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் நம்மை காக்கும் 48 திட்டம், இதயம் பாதுகாப்போம் திட்டம், பாதம் காப்போம் போன்ற புதிய திட்டங்கள் மூலம் தமிழ்நாடு சுகாதாரத்துறை பிற மாநிலங்களுக்கு முன் மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளை நாடி வரும் நோயாளிகளை இனி மருத்துவ பயனாளிகள் (மருத்துவ பயனாளர்கள்) என அழைக்க வேண்டும் என தனி அரசாணை பிறப்பித்துள்ளார்கள். அதன்படி இனி மருத்துவ பயனாளிகள் என மாற்றுவதற்காக நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி தொடங்கி 60 ஆண்டு நிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வைரவிழா நேற்று மிக சிறப்பாக நடைபெற்றது. கடந்த 60 ஆண்டுகளில் பல்வேறு சாதனைகள் புரிந்த திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரியில் சிறப்பாக பணிபுரிந்த மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவக்கல்லூரியில் பயின்று வெளியில் சென்றுள்ள மாணவ, மாணவியர்களுக்கும் விருதுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வைர விழா நிகழ்ச்சியில் தலா ரூ.50 இலட்சம் மதிப்பில் நாங்குநேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முனைஞ்சிப்பட்டியிலும், அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பத்தமடை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.09.2023 அன்று தமிழ்நாட்டில் மூளைச்சாவு ஏற்பட்டு மரண அடைந்தவர்கள் உடல் உறுப்புகள் தானம் செய்யும்பட்சத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் அவர்களின் உடலிற்கு அரசு மரியாதை செலுத்தப்படும் என அறிவித்தார்கள். அந்த வகையில் முளைச்சாவு ஏற்பட்டு உடல் உறுப்பு தானம் செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடமாக உள்ளது. தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.

டெங்கு பாதிப்புகள் எடுத்து கொண்டால் இந்த ஆண்டில் 15,000 நபர்களுக்கு பாதிப்புகள் இருக்கிறது. அதில் 8 நபர்கள் இழப்பு உள்ளாகி உள்ளனர். தமிழ்நாட்டில் டெங்கு பாதிப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளது. காய்ச்சல் என்றால் தனிச்சையாக மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டாம் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு வந்து பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நான்காண்டுகளில் பருவமழை காலங்கள் வருவதற்கு முன்னால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக இழப்புகளும், பாதிப்புகளும் குறைந்துள்ளது.

தென்காசி, மயிலாடுதுறை, பெரம்பலூர், காஞ்சிபுரம், திருப்பத்தூர், இராணிபேட்டை ஆகிய 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக ஒன்றிய மருத்துவத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

மத்தியபிரதேசம் மாநிலம் சிந்த்வாரா மாவட்டத்தில் ஏற்பட்ட குழந்தைகள் மரணத்திற்கு தொடர்புடையதாக கருதப்படும் கோல்ட்ரிப் சிரப் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் தமிழ்நாடு அரசு சார்பில் துணை மருந்து கட்டுபாட்டு இயக்குநர் தலைமையிலான குழு ஆய்வு மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வின் மருந்து விதி மீறல்கள் கண்டறியப்பட்டது. அதன் அடிப்படையில் 01.10.2025 அன்று முதல் தமிழ்நாட்டில் கோல்ட்ரிப் சிரப் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. இந்த சந்தேகத்திற்குரிய மருந்து பொது மக்களை சென்றடைய கூடாது எந்த உயிரிழப்பும் ஏற்பட கூடாது என்ற உயரிய எண்ணத்தோடு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து ஒடிசா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு கோல்ட்ரிப் சிரப் விநியோகிக்கப்படுவதால் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கும் இதுதொடர்பான தகவல்கள் 01-10-2025 அன்றே மின்னஞ்சல் மூலமாக மேல் நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டது.

இதையடுத்து, 03-10-2025 அன்று, ஸ்ரீசன் பார்மசியூட்டிகள், நிறுவனத்திற்கு பொது நலம் கருதி மருந்து உற்பத்தியை உடனடியாக நிறுத்த உத்தரவு (Stop Production Order) பிறப்பிக்கப்பட்டு அந் நிறுவனம் அதிகாரிகளால் உடனடியாக மூடப்பட்டது. மேலும் தொடர் நடவடிக்கையாக ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தின் மருந்து உரிமங்கள் முழுவதுமாக ஏன் ரத்து செய்யப்படக்கூடாது (Cancellation) என விளக்கம் கேட்டு குறிப் பாணையும் அனுப்பப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் மீது கிறிமினல் நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இன்று 23 வயது இளைஞர் ராபின்சன் கடந்த 5ஆம் தேதி மேல இலந்தைகுளத்தில் இரு சக்கர வாகன விபத்து ஏற்பட்டு மூளைச்சாவு அடைந்தார்கள். அவர்களின் உறவினர்கள் அன்னாரது உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்துள் ளனர்.

திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது உடலிற்கு அரசின் சார்பில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், மக் ~~கள் பிரதிநிதிகள், அரசு அலு~~ வலர்கள் உள்ளிட்ட பலர் மரியாதை செலுத்தினார்கள்.

முன்னதாக, சிறப்பாக சேவைப்புரிந்து ஓய்வுபெற்ற 18 மருத்துவர்களுக்கு நினைவு பரிசுகளும், பல்கலைக் கழக துறைத்தேர்வுகளில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற 50 மாணவ, மாணவியர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களும், ஆராய்ச்சி பிரிவு, விளையாட்டு பிரிவு, கலைப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறந்து விளங்கிய 12 மாணவர்களுக்கும், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பான சேவை புரிந்த அனைத்து துறைகளின் தலைவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கேடயங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன் அவர்கள், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.விஜய்சந்திரன், துணை முதல்வர் மரு.சுரேஷ்துறை, மருத்துவ கண்காணிப்பாளர் மரு.பாலசுப்பிரமணியன், துறைத்தலை வர் பொது மருத்துவம் மரு.ரத்னகுமார், முக்கிய பிரமுகர்கள் கிரகம்பெல், உட்பட அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள், செவிலியர்கள், என பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### விளநகர் எஸ். கணேசன்

### அக்டோபர் 10 (1987)



மாணவர் பருவத்திலிருந்து திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு, பின்னர் கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து பணியாற்றியவர்.

அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்புக்கு உரியவராக விளங்கியவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக தொகுதி மக்களுக்கு பணியாற்றியவர்.

செம்பனார்கோயில் ஒன்றிய பெருந்தலைவராகவும் – கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தி.மு.க.வின் அறிவுச் செல்வம்!


**தமிழன் பிரசன்னா**
மாநில செய்தித் தொடர்பு
இணைச் செயலாளர்
தி.மு.க.






முத்தமிழறிஞர் கலைஞர் மறைவின்போது, ராஜாஜி அரங்கில் அவரது உடல் இருந்த மணித்துளிகளில் ஒரு நிமிடம் எவராலும் மறக்க இயலாதது. மெரினாவில் கலைஞருக்கான இடத்தை சட்டப்போராட்டம் நடத்தி தீர்ப்பை பெற்ற நொடி அது. அந்த நொடியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அன்றைய செயல் தலைவரும் இன்றைய கழகத் தலைவருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உடைந்து அழுத காட்சிகள் உணர்ச்சிமயமானவை. கட்டுப்படுத்த முடியாமல் கசிந்த அந்த கண்ணீரை, உடைந்து அழுத அந்த நொடிகளை அவர் வாழ்வில் மீண்டும் சந்தித்த ஒரு நாள் 10 அக்டோபர் 2024. ஆம், அன்றுதான் முரசொலி செல்வம் மறைந்தார். “நான் சாய்வதற்குக் கிடைத்த கடைசித் தோளை, கொள்கைத் தூணை இழந்து நிற்கிறேன். என்னை நானே ஆற்றுப்படுத்த முடியாத நிலையில், கட்சியிலும் குடும்பத்திலும் யாருக்கு எப்படி ஆறுதல் சொல்லப் போகிறேன்” என்று மனமுடைந்து இரங்கல் அறிக்கை வெளியிட்டதுடன், கோபாலபுரம் இல்லத்தில் முரசொலி செல்வம் உடலுக்கு அருகில் அவர் உறைந்து நின்ற காட்சிகளும் 2018 ஆகஸ்ட் 7ஆம் தேதியை மீட்டுருவாக்கம் செய்தன.

### பன்னீர்செல்வத்தின் நினைவாக!

கலைஞரின் இழப்புக்கு ஈடாக முரசொலி செல்வத்தின் இழப்பு கழகத் தலைவரை பாதித்தது என்றால், அந்த கொள்கைச் செல்வத்தின் வாழ்நாள் உழைப்புதான் காரணம். முத்தமிழறிஞர் கலைஞரின் மருமகனும், முரசொலி மாறனின் உடன்பிறந்த சகோதரருமான முரசொலி செல்வம் 1940-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் தேதி திருவாரூர் மாவட்டம் திருக்குவளையில் பிறந்தவர். இவரது பிறப்புக்கு ஒரு மாதத்திற்கு முன்னர்தான், மார்ச் 1-ஆம் தேதி நீதிக்கட்சியின் சர் ஏ.டி.பன்னீர்செல்வம் இந்திய அதிகாரியாக பொறுப்பேற்பதற்காக லண்டன் சென்றபோது, ஓமன் கடலில் விமானம் விபத்துக்குள்ளாகி மறைவெய்தினார். மனைவி நாகம்மையார் மறைந்தபோது கூட கண்ணீர் விடாத தந்தை பெரியார், ‘மனம் பதைக்கிறது நெஞ்சு திக் திக் என்று அடித்துக்கொள்கிறது கண் கலங்கி மறைக்கிறது’ என்ற கதறி அழுதார். பெரியாரை மட்டுமல்ல, ஒட்டுமொத்த திராவிட இயக்கத்தினரையும் கலங்கடிக்கச் செய்தது அந்த மரணம். அதனால்தான் அவரின் நினைவாக தனது மருமகனுக்கு பன்னீர்செல்வம் என பெயர் சூட்டினார் கலைஞர். பள்ளிப் படிப்பை சொந்த ஊரில் முடித்த செல்வம், சென்னை மாநிலக்கல்லூரியில் பி.ஏ. முடித்தார்.

செல்வம் பிறந்தபோதே, “உனக்கு பெண் குழந்தை பிறந்தால், அதற்கு செல்வி என பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டும்” என்று அன்புக்கட்டளை இட்டிருந்தார் கலைஞரின் தாயார். அதுபோலவே கலைஞருக்கும் ஒரு மகள் பிறந்தது. மருத்துவமனையில் அப்போது உடனிருந்த அக்கா சண்முகசுந்தரத்தம்மாள், “பிறந்தது என்ன குழந்தை?” எனக் கேட்க, “செல்வத்துக்கு ஒரு செல்வி பிறந்திருக்கிறாள்” என்று அப்போதே பதிலளித்துள்ளார். அதன்படியே, பேரறிஞர் அண்ணா தலைமையில், தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, காயிதே மில்லத் எனப் பெருந்தலைவர்கள் பலரும் பங்கேற்க இருவரின் திருமணத்தை வெகுசிறப்பாக நடத்தினார் கலைஞர். முரசொலி செல்வம், செல்வி தம்பதிக்கு ஒரு மகள் எழில் அரசி பிறந்தார்.

### பழிவாங்கிய எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா!

கலைஞரின் அக்கா மகன், முரசொலி மாறனுக்கு தம்பி, மகள் செல்விக்கு கணவர் என்ற குடும்ப உறவுகளையெல்லாம் தாண்டி முரசொலி செல்வத்தை தனது உயிருக்கு நிகராக நேசித்தார் கலைஞர். அதற்குக் காரணம் தி.மு.கழகத்தி அறிவுசார் சொத்தாக மிளிர்ந்தவர் முரசொலி செல்வம். தி.மு.க.வினரை கடந்து பொதுவான வாசகர்களை ஈர்க்கும் விதமாக துணுக்குச் செய்திகளை எழுதி வந்த முரசொலி செல்வம், 1989 முதல் முரசொலியை கவனிக்கும் பொறுப்பை ஏற்றார்.

1980-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி திருச்செந்தூர் ஆலய சரிபார்ப்பு அதிகாரியாக இருந்த சுப்ரமணியப் பிள்ளை மர்மமாக கொலை செய்யப்பட்டார். ஓய்வுபெற்ற நீதிபதி சி.ஜே.ஆர்.பால் தலைமையில் விசாரணை கமிசன் அமைத்திருந்தது எம்.ஜி.ஆர். அரசு. அந்த அறிக்கையை சட்டமன்றத்தில் வெளியிட்டு விவாதம் நடத்த வலியுறுத்தினார் கலைஞர். ஆனால் காலம் தாழ்த்தியது எம்.ஜி.ஆர். அரசு. சுப்ரமணியப் பிள்ளை தற்கொலை செய்துகொண்டதாக கூறியிருந்தது அரசு. திடீரென ஒருநாள் பத்திரிகையாளர்களை சந்திக்க பால் கமிசன் அறிக்கையை வெளியிட்டார். அதில் தற்கொலை அல்ல, கொலை என்று தெள்ளத்தெளிவாக கூறப்பட்டிருந்தது. அரசு நியமித்த கமிசனின் அறிக்கை எதிர்க்கட்சித் தலைவரின் கைகளுக்கு எப்படிச் சென்றது என எம்.ஜி.ஆர். பதறினார். இதனால் கடும் ஆத்திரமடைந்த எம்.ஜி.ஆர். அரசு முரசொலி அலுவலத்தில் சோதனை நடத்தியது. அரசு அதிகாரி சதாசிவம், கருணாநிதியின் உதவியாளர் சண்முகநாதன் ஆகியோரோடு சேர்ந்து முரசொலி செல்வத்தையும் கைதுசெய்து சிறையில் அடைத்தது.

அதேபோல, 1991-ஆம் ஆண்டு, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில், அப்போதைய தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் பரிதி இளம்வழுதி, தமிழ்நாடு வீட்டுவசதி குடியிருப்பு தொடர்பாக பேரவையில் பேசிய செய்தியை முரசொலியில் பிரசுரித்தார். ஆர்.எம்.வீரப்பனைப் பற்றி அவதூறு கருத்துகளை கூறியிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. மேலும் அரசின் கொள்கைகள் குறித்தும், சட்டப்பேரவையின் அதிகாரம் உள்ளிட்ட பல்வேறு முரசொலி கட்டுரைகளையும் சுட்டிக் காட்டினர். இதற்காக அப்போதைய சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா, முரசொலி மீது உரிமை மீறல் பிரச்சினை எழுப்பினார். சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உத்தரவின்படி சட்டமன்றத்தில் ஆஜரானார் முரசொலி செல்வம். அவரை விசாரிப்பதற்காக சட்டமன்றத்தில் ஒரு கூண்டு வைக்கப்பட்டது. ஆனால், இந்த விசாரணையில் தனக்கு தகவல் சொன்னவர்களைப் பற்றி கூற மறுத்தார் முரசொலி செல்வம். துணிச்சலாக நின்றார். அவர் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முரசொலி செல்வத்தின் மீதான இந்த நடவடிக்கைக்கு பத்திரிகையாளர் சங்கங்கள் பலவும் கண்டனம் தெரிவித்தன.

முரசொலி செல்வத்தின் துணிச்சலைப் பாராட்டி ‘கூண்டு கண்டேன் - குதூகலம் கொண்டேன்’ என்ற தலைப்பில் தி.மு.க. தொண்டர்களுக்கு கடிதம் எழுதினார் கலைஞர். “பெரியார், அண்ணா, ராஜாஜி, காயிதே மில்லத் ஆகியோர் புடைசூழ, மணக்கோலத்தில் செல்வத்தை நான் பார்த்த போதுகூட எனக்கு அத்தனை மகிழ்ச்சியில்லை!

புதுக்கோட்டை, திருச்சி நிகழ்ச்சிகளை முடித்துவிட்டுத் திரும்பும் போது தாம்பரம் ரயிலடியில் வாங்கிப் படித்த ஆங்கிலம். தமிழ் நாளேடுகள் அத்தனையிலும் செல்வம் சட்டப்பேரவைக் கூண்டில் சிரிப்பு தவழ நின்று கொண்டிருக்கும் படம் வெளிவந்துள்ளதைப் பார்த்த போதுதான் எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக் குள் செல்வம் நின்றிருந்தால்; என்னகம் வாடிப் போயிருக்கும்! அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்து ணைப் பொருத்தமாக அப்போதே வைத் தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்” என அக மகிழ்ந்தார் கலைஞர்.

“அடையாறு மருத்துவமனையில் அண்ணாவுக்கு இறுதியாக ஓர் அறுவை சிகிச்சை அவசியம் தேவை என முடிவு செய்யப்பட்டபோதுகூட; அண்ணா அவர்கள் அந்த உடல் நலிவுடனும் “செல்வா எங்கே?” என அழைத்து. செல்வம் அவர் அருகில் சென்றதும், ‘செல்வா! வீட்டில் உள்ள பிள்ளைகளை அழைத்து வா! நான் பார்க்க வேண்டும்’ என்று கூறியதை எப்படி மறக்க முடியும்? அந்தப் பாசமுள்ள பெருந்தலைவனின் படத்தருகே கூண்டு! அதிலே செல்வம்! கடமை. கண்ணியம், கட்டுப்பாடு பார்த்தாயா! என்ற எழுத்துக்கள் ஒளி விடுகின்றன” என முரசொலி செல்வத்தைப் பற்றிய பசுமையான நினைவுகளையும் அந்தக் கடிதத்தில் மிக அழகாக பகிர்ந்திருந்தார் கலைஞர்.

சட்டமன்றத்துக்கு செல்வதற்கு முன்பாக, கலைஞரை சந்தித்த முரசொலி செல்வம், நான் பேரவையில், அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கட்டுமா என்று கேட்டுள்ளார். அப்போது கலைஞர், “இது சட்டமன்றம், நீ எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது. உன் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்றால், நீல நிற சட்டைக்கு பதிலாக கருப்புச் சட்டை அணிந்து செல்” என்று கூறியுள்ளார். அதன்படியே அன்று சட்டப்பேரவைக்கு கருப்புச் சட்டை அணிந்து சென்றார் முரசொலி செல்வம். தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்வு அந்த சம்பவம். ஏனெனில் அதற்கு முன்பும் சரி, அதற்கு பின்பும் சரி, இப்படியொரு சம்பவம் நடந்ததே இல்லை.

### Murasoli will take it

அதேபோல, ஒரு மிகச்சிறந்த பத்திரிகையாளராக முரசொலி செல்வம் துணிச்சலாக கையாண்ட மற்றொரு விவகாரம் ராஜீவ் காந்தி படுகொலை. 1991 மே 21-ஆம் தேதி ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். அந்த படுகொலைக்கும் தி.மு.க.வுக்கும் என்ன சம்பந்தம்? ஆனால் அரசியல் விஷமிகள் தி.மு.க.வை நோக்கி அதை திருப்பிவிட்டனர். முரசொலி அலுவலகம் தாக்கப்பட்டு, தீ வைத்து எரிக்கப்பட்டது. வாகனங்கள், ஆவணங்கள், அச்சுக் காகிதங்கள், அச்சகம் எல்லாம் எரிந்து கருகின. எனினும் மறுநாளே முரசொலி நாளிதழ் அச்சிடப்பட்டது. அதற்குப் பின்னால் இருந்த உழைப்புக்கும் துணிச்சலுக்கும் முக்கியக் காரணமானவர் முரசொலி செல்வம். அன்றைக்கு வந்த முரசொலிக்கு முரசொலி செல்வம் வைத்த தலைப்பு ‘Murasoli will take it’.

ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன்பாக, ஜனநாயகப் படுகொலை ஒன்று நடைபெற்றது. அரசியல் சட்டத்தின் 356வது பிரிவின் இரண்டாம் பகுதியான ‘அதர்வைஸ்’ என்பதை பயன்படுத்தி ஆளுநரின் ஒப்புதல் இல்லாமலேயே, 1991 ஜனவரியில் தி.மு.க. அரசை கலைத்தது ஒன்றிய அரசு. ஆட்சி கலைப்பு அறிவிப்பை காலையில் இருந்தே எதிர்பார்த்திருந்த கலைஞர், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசித்து கொண்டிருந்தார். அன்று இரவு 10.30 மணிக்கு, முரசொலி அலுவலகத்தின் ஆசிரியர் குழு ஆட்சிக்கலைப்பு செய்தியை எந்த முறையில் வெளியிடுவது, என்ன தலைப்பு வைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த முரசொலி செல்வம், அடுத்த சில நிமிடங்களில் செய்தி, அதற்கான தலைப்பு, முதன்மைச்செய்தியை ஒட்டிய பெட்டி செய்திகள் என அனைத்தையும் விறுவிறுவென எழுதிக்கொடுத்தார். எந்த செய்தியை எந்தப் பக்கத்தில் போட வேண்டுமென்றும் அங்கிருந்தவர்களுக்கு விளக்கிவிட்டுச் சென்றார். ஆட்சிக்கலைப்பு ஒரு ‘ஜனநாயக படுகொலை’ என்பதுதான் அவர் கொடுத்த தலைப்பு.

### ‘சிலந்தி’யாக கொட்டியவர்!

ஒட்டுமொத்தமாக அரை நூற்றாண்டுக்கு மேல் முரசொலிக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தவர் முரசொலி செல்வம். கலைஞருக்கு அடுத்து முரசொலியில் அதிக காலம் பங்களிப்பு செய்தவர் என்ற பெருமை இவருக்கு உண்டு. கலைஞரின் எண்ணத்தை தனது எழுத்துகளால் பிரதி பலித்தார். கலைஞரின் எள்ளல் நடையில் மட்டுமல்ல, காத்திரமான எழுத்து நடையும் இவரது தனித்த பாணி. சிலந்தி கட்டுரைகள் மூலம் ஒவ்வொரு முறையும் அவர் நிரூபித்துக் கொண்டே இருந்தார். ஆளுநர் ஆர்.என்.ரவியின் அத்து மீறல்களுக்கு எதிராக, “கொக்கென்று நினைத்தாயோ கொங்கனவா?” என்ற அவரது சிலந்தி கட்டுரை இன்றைய தலைமுறையினரையும் அவரது எழுத்துக்களை நோக்கி ஈர்க்கச் செய்தது. 80 ஆண்டுகளைக் கடந்த முரசொலி தனது பயணத்தில் எதிர்கொண்ட நெருக்கடிகளை, தாக்குதல்களை, கைது நடவடிக்கைகளை தொகுத்து ‘முரசொலி - சில நினைவுகள்’ என நூலையும் எழுதினார். தனது அத்தனை ஆற்றல்களுக்கு பின்னாலும் அமைதி ஒன்றையே இலக்கணமாகக் கொண்டிருந்தவர் முரசொலி செல்வம்.